## இயல் 6.1 - எண்கள்

பயிற்சி எண் :: 6.1.7.7.G

எண்கள் - (மீ.சி.ம.) (LCM) - தினவாழ்க்கைச் சிக்கல்கள் II

## எண்கள் - (மீ.சி.ம.) (LCM) - தினவாழ்க்கைச் சிக்கல்கள் II

ராகுலின் அன்னை, அவனை அருகில் உள்ள ஸூப்பர் மார்க்கெட்டுக்குச் சென்று கத்திரிக்காய், வெண்டைக்காய் மற்றும் புடலங்காய் ஆகிய காய்களை சம எடைக்கு வாங்கிவரச் சொன்னார். ஸூப்பர் மார்க்கெட்டில் இந்த மூன்று காய்களும் முறையே 350, 500 மற்றும் 700 கிராம் பாக்கெட்டுகளாக விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. என்றால், ராகுல் எந்த குறைந்த எடைக்கு 3 காய்களையும் வாங்கியிருக்க முடியும்?

மூன்று காய்களின் பெயரும் அவற்றின் எடையும் = கத்திரிக்காய் (350 கிராம்), வெண்டைக்காய் (500 கிராம்) மற்றும் புடலங்காய் (700 கிராம்)

ராகுலின் அன்னை சொல்லி அனுப்பிய நிபந்தனை = எல்லா காய்களும் சம எடையில் வாங்க வேண்டும் என்பது தான் அந்த நிபந்தனை. அந்த எடை என்ன என்பது தான் வினா.

இம்மூன்று எண்களின் மீ.சி.ம. கண்டுபிடித்தால் அந்த எடை கிடைத்து விடும். முதலில், இம்மூன்று எண்களை அவற்றின் பகாக்காரணிகளாக எழுதி அதிலிருந்து அவற்றின் மீ.சி.ம.-வைக் கண்டுபிடிக்கலாம். =

$$\overset{a}{2} \times \overset{b}{5} \times \overset{c}{5} \times \overset{e}{7} = 350$$

$$\overset{a}{2} \times \overset{d}{2} \times \overset{b}{5} \times \overset{c}{5} \times 5 = 500$$

$$\overset{a}{2} \times \overset{d}{2} \times \overset{b}{5} \times \overset{c}{5} \times \overset{e}{7} = 700$$

மீ.சி.ம.(350,500,700) $= \overset{a}{2} \times \overset{b}{5} \times \overset{c}{5} \times \overset{d}{2} \times \overset{e}{7} \times 5 = \boxed{3500}$

ராகுல், 3500 கிராமுக்கு அதாவது 3.5 கிலோ கிராமுக்கு எல்லா காய்கறியும் வாங்கிவர இயலும். அவ்வாறு செய்தால், 350 கிராம் எடையுடைய 10 கத்திரிக்காய் பாக்கெட்டுகளும், 500 கிராம் எடையுடைய 7 வெண்டைக்காய் பாக்கெட்டுகளும் 700 கிராம் எடையுடைய 5 புடலங்காய் பாக்கெட்டுகளும் வாங்கிவர இயலும்.

Sum & solution prepared on Wednesday 27th October, 2021 :: 11:01 Hrs.
All rights related to content above such as problem creation, solution, voice over, Video creation are reserved to
V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, CBE - 641 046, INDIA. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.